**செ.வெ.எண்:26** **நாள்:10.03.2020**

## அரியலூர் மாவட்டத்தில் சுகாதார திருவிழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், பொது சுகாதாம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் சுகாதார திருவிழா அரியலூர் இந்திய மருத்துவ சங்கம் கட்டிடத்தில் **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தொல்.திருமாவளவன் அவர்கள்** முன்னிலையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் சுகாதார துறையின் சார்பில் நடைபெற்ற சுகாதார திருவிழாவில் பொது மருத்துவம், மகளிர் நலம், குழந்தைகள் நலம், அறுவை சிகிச்சை ஆலோசனை, காது, மூக்கு, தொண்டை மருத்துவம், கண் மருத்துவம், பல் மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இருதய மருத்துவம், கர்ப்பவாய் புற்றுநோய் பரிசோதனை மற்றும் காசநோய் மற்றும் தொழுநோய் பரிசோதனை உள்ளிட்ட சிறப்பு மருத்துவர்களால் முகாம் நடைபெற்று, பொதுமக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவ முகாமில் இசிஜி, ஸ்கேன், எக்ஸ்ரே, இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் சக்கரை நொய் கண்டறியும் பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகள் பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்பட்டன.

இம்மருத்துவ முகாமில் 404 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 43 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களின் 4 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். 15 கர்ப்பிணி தாய்மார்களுக்கு கர்ப்பவாய் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 108 புற நோயாளிகளுக்கு ஆய்வக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 85 நோயாளிகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு 2 நபர்களை மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 42 நோயாளிகளுக்கு இசிஜி பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 44 நோயாளிகளுக்கு பல் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 49 புறநோயாளிகளுக்கு பல் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இன்று நடைபெற்ற மருத்துவ முகாமில் 18 நபர்கள் இரத்த தானம் அளித்துள்ளனர். இரத்த தானம் அளித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. 15 கர்ப்பிணி பெண்களுக்கு அம்மா பெட்டகம் மற்றும் சஞ்சிவீ பெட்டகம் வழங்கப்பட்டது. இரண்டு குழந்தைகளுடன் குடும்ப கட்டுப்பாடு செய்து கொண்ட தாய்மார்களுக்கு பாராட்டி பரிசுகளும் வழங்கப்பட்டது.

முன்னதாக, சுகாதாரத்துறை, எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத்துறை, உணவு பாதுகாப்புத்துறை, சத்துணவுத்துறைகளின் சார்பில் ஊட்டச்சத்து உணவுகள் குறித்த அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தது.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி தலைவர் மரு.முத்துகிருஷ்ணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, தலைமை மருத்துவ அலுவலர் ரவிசங்கர், மருத்துவர்கள் மரு.அனிதா, மரு.மணிகண்டன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பொம்மி மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**